Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP
**C.C. No: 38 of 2024**

DATE :24.03.2026

Depositions of witness for Prosecution

PW:

| | | | |
|---|---|---|---|
| Name | **சந்திரக்குமார்** | Caste | |
| Father/Husband's Name | **சின்னமநாயக்கர்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of March 2026

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு. கதிரேசன் ஆஜர்)

**முதல் விசாரணை : –**

1) நான் சீல்நாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் பேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. பகல் 11 மணிக்கு மேல் 05.10.2017 அன்று காலை 11.00 மணிக்கு, நானும், பாண்டி கண்ணன் என்பவரும் சம்பவ இடம் வழியாக சென்ற பொழுது போலீசார்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் பாண்டிக்கண்ணன் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் காவலர்கள் கேட்டதற்காக காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு